**செய்தி வெளியீடு எண்–660** **நாள் : 05.08.2010**

**அருந்ததியர் இனத்தவர் சாதிச் சான்றினை பதிவுசெய்துகொள்ள 31.08.2010 வரை காலஅவகாசம் நீட்டிப்பு.**

---

அரசாணை நிலை எண் 50, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 29.04.2009–ல், ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட 18% இடஒதுக்கீட்டுக்குள் அருந்ததியர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கென 3% உள்ஒதுக்கீடு ஏற்கனவே அரசால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கனவே பதிவுசெய்த அருந்ததியர் இனத்தவர்கள் அனைவரும் தங்களுடைய சாதிச்சான்றிதழை வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து பெற்று, வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டையுடன் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரிடையாகச் சென்றோ, தபால்மூலமாகவோ, 31.07.2010–க்குள் **அருந்ததியர்** என வகைப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆனால் அருந்ததியர் (SCA) சான்றிதழ் வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து பெற்று வருவதற்கு காலஅவகாசம் தேவைப்படுவதாகவும், 31.08.2010 வரை காலஅவகாசத்தை நீட்டிக்க பதிவுதாரர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு வருவதால், அருந்ததியர் (SCA) என்ற சாதிச்சான்றிதழை வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெற்று எவ்வளவு விரைவில் சாதிப்பிரிவை பதிந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளவேண்டும் என்றும், **31.08.2010** வரை காலஅவகாசம் நீட்டிக்கப்படுகிறது என்றும், ஆனால் வேலைவாய்ப்புக்கான பரிந்துரைகள் தற்போதுள்ள விவரங்கள் அடிப்படையில் தொடர்ந்து அனுப்பப்படும் என்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மடிகா, பகடை, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா போன்ற ஏழு பிரிவினரும் அருந்ததியர் வகைப்பாட்டில் பதிவு செய்யப்படுவர் எனவும், தற்போது உடற்பயிற்சி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்கள் காலியிடங்களுக்கு அருந்ததியர் பிரிவினருக்கு தனியே பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

**************************

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**